**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**CC.No.403/2022**

**Deposition of LW-4/PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | தங்கபாண்டி | **Age** | : | 37/2026 |
| **Father Name** | : | ராசு | **Religion** | : | இந்து |
| **Village** | : | போடிநாயக்கனூர் | **Calling** | : | கூலிவேலை |
| **Taluk** | : | போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **12/03/2026.**

2, 3 எதிரிகள் ஆஜர். 1வது எதிரி ஆஜரில்லை. குவிமுச 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1) நான் போடிநாயக்கனூரில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். வழக்கின் புகார்தாரரை தெரியாது. எதிரிகளை தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது .**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2) ஜெயவேல் என்பவருக்கு சொந்தமாக கொட்டக்குடியில் உலகமரம், எலுமிச்சை மர தோப்பு உள்ளது என்றும், 04/05/2017ம் தேதி காலை 8 மணிக்கு நானும், பவுன், சரவணன், முருகன் ஆகியோர் அவரது தோட்டத்தில் இலவம் பஞ்சுகளை அடிக்கச் சென்றோம் என்றும், அப்போது ராஜா, குமார், குரு சிங்கம், ஈஸ்வரி, நாகராணி ஆகியோர் அங்கு வந்து எங்களிடம் இந்த இடம் ராஜாவின்

அம்மாவிற்கு சொந்தமானது என்றும், எங்களை அங்கு வேலைக்கு செல்லாமல் வெளியில் செல்லுமாறும் மிரட்டினார்கள் என்றும், குமார் என்பவர் பவுன் என்பவரை வலது கன்னத்தில் அடித்து கீழே தள்ளினார் என்றும், ராஜா சரவணனை கம்பால் அடித்தார் என்றும், சரவணனும் பக்கத்தில் இருந்தவர்களும் அந்த எதிரிகளை விளக்கி விட்டார்கள் என்றும், அவர்கள் செல்லும்போது அருவாளை காட்டி இங்கு வேலைக்கு வந்தால் உங்கள் அனைவரையும் கொன்று விடுவோம் என்று மிரட்டினார்கள் என்றும், சம்பவம் பற்றி ஜெயவேலிடம் கூறினோம் என்றும், ஜெயவேல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகள் எனது ஊர்காரர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால், சரியல்ல

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி, குறுக்குவிசாரணை இல்லை எனத் தெரிவித்ததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.03.12 19:28:56 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**